கழகத் தலைவர் வேண்டுகோளை ஏற்று ஒவ்வொருவராகச் சந்தித்து, பொதுமக்களுடைய கோரிக்கையைக் கேட்டு

# கழக வெற்றிக்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்!

## தாராபுரத்தில் – கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு பேச்சு!




தாராபுரம், செப்.20-

**தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் ஆலோசனைக் கூட்டம், கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா அறிமுகக் கூட்டம் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன் வரவேற்புரையில், முன்னாள் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், கே.இ.பிரகாஷ் எம்.பி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.**

கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:

திராவிட முன்னேற்ற கழகம் மீண்டும் ஒரு எழுச்சி பெறுவதற்கு ஒரு முக்கிய மான தேர்தல் இந்த நடைபெற இருக்கின்ற தேர்தல். மேடையிலே நம்முடைய சாமிநாதன் யார் யாருக்கு எந்தெந்த பகுதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கு சொன்னார், அதிலே ஏதாவது சந்தேகம் இருக்குமென்று சொன்னால் கூட சாமிநாதன் அவர்களை மீண்டும் தொடர்பு கொண்டு அந்த பகுதியை தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு சில பேருக்கு எங்களுக்கு மாற்றி தர வேண்டும் என்று சொன்னால் அதையும் மாற்றி தரக்கூடிய ஏற்பாடுகளை செய்து தருவார்.

நாளையிலிருந்து நீங்கள் பொறுப்பேற்று கொண்டிருக்கின்ற தலைவர்கள், வந்திருக்கிற ஒன்றிய கழக செயலாளர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலே இருந்து சிறப்பாக செயல்பட வேண்டும். நேற்று தலைவர் அவர்கள் எங்களுக்கு சொன்னது எல்லாரும் போய் கணக்கு காட்டிவிட்டு வந்திராதீங்க,

ஒவ்வொரு ஊராக போங்க, ஒவ்வொருத்தரா சந்திங்க, பொது மக்களுடைய கோரிக்கையை கேளுங்க, இன்றைக்கு ஆட்சியில் வந்தவர்கள் செய்திருக்கிற, தரேன்னு சொன்ன தேர்தல் அறிக்கையிலே சொன்னதை தராது இருக்கிறதை மக்கள் கிட்ட சொல்லுங்க. நீங்க போய் தேர்தல் வேலை பார்க்கிறேன்னு சொல்லி கணக்கெடுத்துட்டு ஒரு இடத்துல உட்கார்ந்துடக்கூடாதுன்னு நேத்து தலைவர் கூப்பிட்டு எங்களை கூப்பிட்டு இதெல்லாம் சொல்லுங்கன்னு சொன்னார்.

நான் சாமிநாதனிடமும், பத்மநாபனிடமும் சொன்னேன், நான் வருகின்ற போது கரூர் மாவட்ட செயலாளர் செந்தில் பாலாஜி இடம் சொன்னேன். இதை தலைவர் அவர்கள் இப்படி பேசியிருக்கிறார். இதை அனைவரும் ஒரு அளவுகோலாக எடுத்து ஒரு எச்சரிக்கையாக எடுத்து அனைவரும் பணியாற்ற வேண்டும்.

எங்களுக்கு சொல்லுகிறபோது இங்க யார் யாருக்கு எந்தெந்த பகுதியை ஒதுக்கி இருக்கிறீங்க? எங்களுக்கு உடனே அனுப்புங்கன்னு சொல்லி தலைவரும், தலைவருடைய உதவியாளரும் சொன்னார்கள். வந்திருக்கிற ஒன்றிய செயலாளர்களோடும் நம் தலைவர் அவர்களே நேரடியாக பேச இருக்கிறார்கள். எனவே எந்த நேரம் வேண்டுமானாலும் அவர் பேசுவார். ஆகவே அந்தந்த பகுதியில இருந்து பணியாற்ற வேண்டும். யாராவது நீங்க ஒரு சில பேர் அவசியம் ஏதாவது வேலை இருந்து போனீங்கன்னா மாற்று ஆள வச்சிட்டு போங்க. ஆள மட்டும் இந்த இடத்தை விட்டு போயிறாதீங்க. இது ஒரு முக்கியமான தேர்தல். இந்த இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் நிச்சயமாக வெற்றி பெறும். ஏனென்று நான் சொன்னேன் என்று சொன்னால் உங்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்று சொல்வதாக கருத தேவை இல்லை,

நாம் இரண்டாவது இடத்தில் இருக்கிறோம். மூன்றாவது இடத்தில் தான் தவெக இருக்கிறது. முதல் இடத்தில் இருக்கிற அ.தி.மு.கவுக்கு மீண்டும் வாக்களிப்பார்களா என்பது சந்தேகம். எனவே நாம்தான் நிச்சயமாக இந்த தேர்தலிலே வெற்றி பெற போகிறோம் என்ற அந்த நம்பிக்கை இருக்கிறது.

தயவு செய்து வந்திருக்கிற பொறுப்பாளர்கள் உள்ளூர் செயலாளரோடு இணைந்து கொள்ளவும். நீங்க உங்களுக்கு உடனடியாக யாரையும் தெரிய வாய்ப்பிலை, ஆகவே உள்ளூர்ல இருக்கிற செயலாளரை வைத்து அவர்கள் மூலமாக இந்த பணியில் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்போடு கேட்டு தொடர்ந்து செயல்படுவோம். வெற்றி பெற வைப்போம்.

தளபதி அவர்களை மீண்டும் இந்த நாட்டினுடைய முதலமைச்சராக, உதயநிதி அவர்களை மீண்டும் துணை முதலமைச்சராக உருவாக்க பாடுபடுவோம், பாடுபடுவோம் என்று சொல்லி நம்முடைய சாமிநாதன் தலைமையிலே சிறப்பாக நாம் அனைவரும் பணியாற்றுவோம், பணியாற்றுவோம். நம்முடைய வழக்கறிஞர் சுகன்யா அவர் முதல் நாள் பேசும்போதே சொன்னார் நிச்சயமாக விலைபோகா மாட்டேன் இந்த கட்சியிலே இணைந்து பணியாற்றுவேன் தளபதிக்கு உறுதுணையாக இருப்பேன் என்று அவர் சொல்லியிருக்கிறார் எனவே வழக்கறிஞர், இந்த கட்சியிலே வழக்கறிஞராக இருக்கிறவர் நமக்காக தந்திருக்கிற முதலமைச்சர் அவருடைய வேட்பாளர். இவருடைய பரிந்துரையின் பேரிலே நம்முடைய தளபதி அவர்கள் கழக தலைவரும் உதயநிதி அவர்கள் அளித்திருக்கிற வேட்பாளர். அவரை வெற்றி பெற வைத்து நாங்கள் சட்டமன்றத்திலேஎப்படிசண்டைபோடுகிறோமோ எங்களுக்கு உறுதுணையாக அவரும் சண்டை போட அனுப்புமாறு உங்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏன்னா பேசி, பேசி எங்களை வம்பு இழுக்குறாங்க, செந்தில் பாலாஜி எந்திரிச்சு பேசுவார், செந்தில் பாலாஜியை பேச விட மாட்டாங்க. செந்தில் பாலாஜி பேசறதுக்கு விடறது இல்ல. நாங்களும் செந்தில் பாலாஜி, செந்தில் பாலாஜின்னு கேக்குறோம். ஏன்னா அவர் கேக்குற கேள்விக்கு பதில் சொல்ல முடியாது. அவர் சொல்றாரு மின்சார துறையை பற்றி அந்த அமைச்சருக்கே தெரியாது பூரா விவரமும் அவர் சொன்னார்.

எனவே நாங்கள் எங்களோடு உறுதுணையாக இருப்பதற்கு நம்முடைய சுகன்யா அவர்களை எங்களோடு அழைத்து செல்வதற்கு அனைவரும் பாடுபடுவோம் பாடுபடுவோம் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ், கழக ஆதிதிராவிடர் குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, மாவட்டக் கழக செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள் சு.முத்துசாமி ஈரோடு தெற்கு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ., விருதுநகர் தெற்கு, தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., விருதுநகர் வடக்கு, கே.ஆர்.பெரிய கருப்பன் சிவகங்கை தெற்கு, கீதா ஜீவன் தூத்துக்குடி வடக்கு, அரா.சக்கரபாணி எம்.எல்.ஏ., திண்டுக்கல் மேற்கு, வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., கரூர், தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., தேனி வடக்கு, துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தஞ்சாவூர் மத்தி, வைரமணி திருச்சி மத்தி, காடுவெட்டி தியாகராஜன் திருச்சி வடக்கு, என்.நல்லசிவம் ஈரோடு வடக்கு, என்.கௌதம் (நாகை), மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., நெல்லை மத்தி, ராஜா எம்.எல்.ஏ., தென்காசி மேற்கு, ராஜேஷ்குமார் எம்.பி., நாமக்கல் கிழக்கு, கே.எஸ்.மூர்த்தி எம்.எல்.ஏ., நாமக்கல் மேற்கு, கோ.தளபதி மதுரை மாநகர், கே.கே.செல்லப்பாண்டியன் புதுக்கோட்டை வடக்கு, ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ., திண்டுக்கல் கிழக்கு, பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ., திருவாரூர், நிவேதா என்.முருகன் எம்.எல்.ஏ., மயிலாடுதுறை, மு.மணிமாறன் எம்.எல்.ஏ., மதுரை தெற்கு, கே.ஈஸ்வரசாமி எம்.பி., திருப்பூர் தெற்கு, துரை செந்தமிழ்ச் செல்வன் கோவை மாநகர், தொண்டாமுத்தூர் அ.ரவி கோவை வடக்கு, தளபதி முருகேசன் கோவை தெற்கு, ந.தினேஷ்குமார் திருப்பூர் வடக்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.ஜெயராமகிருஷ்ணன், மு.ஜெயக்குமார், மார்க்கண்டேயன், கடற்கரை ராஜ், மண்ணச்சநல்லூர் கதிரவன், கழக மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் தமிழரசி ரவிக்குமார், கழக மாணவர் அணி செயலாளர் ஜெ.வீரமணி, கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.ராணி, துணை செயலாளர் சத்யா பழனிக்குமார், கழக மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் செ.உமாமகேஸ்வரி, திருச்சி மேயர் அன்பழகன் உள்பட இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

விடுமுறை தினங்கள் – பண்டிகைக் காலங்களில், தொலைதூரம் செல்லும்

# பயணிகளின் இன்னல்களைப் போக்கும் வகையில் ரயில் சேவைகளை மேம்படுத்த வேண்டும்!

## ஒன்றிய அமைச்சருக்கு – தயாநிதி மாறன் எம்.பி. கடிதம்!



சென்னை, செப்.20-

விடுமுறை தினங்கள், வார இறுதி நாட்கள் மற்றும் பண்டிகை காலங்களில் சென்னை - திருச்சி, சென்னை - கோவை, சென்னை - மதுரை, சென்னை - நெல்லை ஆகிய முக்கிய வழித்தடங்களில் பயணிகள் சிரமமின்றி தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்ல ரயில் வசதி மற்றும் கூடுதல் சேவைகளை அதிகப்படுத்தவும் பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்கும் ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க, கழகத் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

**லட்சக்கணக்கான மக்கள் நீண்ட தூரம் பயணம்!**

லட்சக்கணக்கான மக்களுக்கு நீண்ட தூர பொதுப் போக்குவரத்தின் முதன்மையான மற்றும் கட்டணம் குறைவான பயணமாக ரயில் பயணம் விளங்குகிறது. இருப்பினும், முன்பதிவு செய்யப்பட்ட டிக்கெட்டு களைப் பெறுவது மிகவும் கடினமாகிவிட்டது. முக்கியமான வழித்தடங்களில் முன்பதிவு தொடங்கிய சில நிமிடங்களிலேயே டிக்கெட்டுகள் விற்று தீர்ந்துவிடுகின்றன. அவசரமான, எதிர்பாராத அல்லது தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக முன்கூட்டியே தங்கள் பயணத்தைத் திட்டமிட முடியாத பயணிகளை இது கடுமையாகப் பாதிக்கிறது.

வார இறுதி நாட்கள் மற்றும் பண்டிகை விடுமுறை நாட்களில், சென்னையில் இருந்து தங்கள் சொந்த ஊர்களுக்கு ஏராளமான பயணிகள் பயணிக்கும்போது மிகவும் சிரமமான சூழலை சந்திக்க நேரிடுகிறது. ஏற்கனவே சாலை மார்க்கத்தில் கடுமையான போக்குவரத்து நெரிசல் நிலவும் நிலையில் (குறிப்பாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் கடும் நெரிசல் நிலவுகிறது.) தனியார் பேருந்து நிறுவனங்கள், பயண நெரிசல் மிகுந்த காலங்களில் வழக்கமான கட்டணத்தைவிட பல மடங்கு கட்டணம் வசூலிப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் விளைவாக, ஆயிரக்கணக்கான பயணிகள் தங்கள் கடைசி நேர மற்றும் குறைந்த பயண கட்டண தேர்வாக ரயில் சேவையை நாடுகின்றனர். எனினும், குறைவான சேவைகளாலும் போதுமான ரயில் பெட்டி வசதிகள் இல்லாததாலும் கடும் சிரமங்கள் ஏற்படுகிறது. பொதுப் பெட்டிகளில் (General Compartments) பயணிகள் கூட்டம் அதிகமாவதால் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட பயணிகள் பல மணிநேரம் நின்று பயணிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர். சில சமயங்களில் கழிப்பறைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் கூட மிகவும் சிரமமான சூழலில் நிற்க நேரிடுகிறது.

**தொலைதூரப் பயணங்கள்!**

உள்ளூர் ரயில்களில் மட்டுமல்லாமல், தொலை தூரப் பயணங்களிலும் படிக்கட்டுகளில் தொங்கிக்கொண்டு பயணிக்கும் (Footboard Travel) நிகழ்வுகளை நாம் அதிகமாகக் காண்கிறோம். இந்த நெரிசல் காரணமாக, முன்பதிவு செய்யாத பயணிகள் முன்பதிவு செய்யப்பட்ட ரயில் பெட்டிகளுக்குள் (Reservation Coach) நுழைகின்றனர். இதனால் முறையான முன்பதிவு செய்திருக்கும் பயணிகளுடன் தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய நிகழ்வுகளை தனிப்பட்ட பயணிகளுக்கு இடையிலான மோதல்களாக மட்டும் பார்க்கக்கூடாது.

இதன் அடிப்படைப் பிரச்சனை, பயணிகள் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான வசதிகள் அல்லது அதிக எண்ணிக்கையிலான ரயில் பெட்டிகள் இல்லாததே ஆகும். சாதாரண நாட்களில் பயண நெரிசல் மிகுந்த நேரங்களிலும், நகரங்களில் வசிப்பவர்கள் பண்டிகைக் காலங்களில் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பும் பயணக் காலங்களிலும் பிரச்சனைகளை தொடர்ந்து சந்திக்க நேரிடுகிறது.

உங்களுக்கு நினைவிருக்கலாம், நெரிசலைக் குறைக்க நெரிசல் மிகுந்த நேரங்களில் (Peak Hours) கூடுதல் ரயில்களை இயக்குவது மற்றும் அனைத்து ரயில்களிலும் 'மூடிய கதவு அமைப்பை' (Closed Door System) செயல்படுத்துவது போன்ற விஷயங்களை, 11.06.2025, 31.05.2022 மற்றும் 17.08.2019 தேதியிட்ட கடிதங்கள் மூலம் அமைச்சகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

மேலும் நாடாளுமன்றத்திலும் பல முறை இது குறித்துப் எடுத்துரைத்துள்ளேன். பட்ஜெட் முன்மொழிவு களில் சேர்ப்பதற்கான ஆலோசனைகள் கோரப்பட்டபோது, மாண்புமிகு நிதியமைச்சரிடமும் இதே கோரிக்கையை முன்வைத்திருந்தேன். சென்னை கோட்டத்தின் கீழ் வரும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான பல கூட்டங்களில், தெற்கு ரயில்வேயின் பொது மேலாளரின் கவனத்திற்கும் இக்கோரிக்கை கொண்டு செல்லப்பட்டுள்ளது.

**கூடுதல் ரயில்களை இயக்க வேண்டும்!**

எனவே தொடர் விடுமுறைகள், பண்டிகை காலங்கள் மற்றும் பயணிகள் வருகை வழக்கத்தை விட அதிகமாக இருக்கும் என்று கணிக்கக்கூடிய மற்ற நாட்களிலும் தமிழ்நாட்டில் சென்னை - திருச்சி, சென்னை - கோவை, சென்னை - மதுரை, சென்னை - நெல்லை ஆகிய முக்கிய வழித்தடங்கள் மற்றும் அதிக தேவை உள்ள வழித்தடங்களில் கூடுதல் ரயில்களை இயக்க வேண்டும்.

பயணிகளின் எண்ணிக்கை மற்றும் கடந்தகாலத் தேவையின் அடிப்படையில், அதிக தேவை உள்ள வழித்தடங்களில் இயங்கும் ரயில்களில் முன்பதிவில்லாத பொதுப் பெட்டிகளின் (General Coaches) எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

செயல்பாட்டு ரீதியாகச் சாத்தியமான இடங்களில், அதிக பயன்பாட்டில் உள்ள வழித்தடங்களில் இயங்கும் பொருத்தமான ரயில்களில் குறைந்தது 10 முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளை இணைக்க வேண்டும்.

முன்பதிவு மற்றும் பயணிகள் குறித்த கடந்தகாலத் தரவுகளைப் பயன்படுத்தி, மிக அதிக தேவை இருக்கும் காலங்களைக் கண்டறிந்து, முன்கூட்டியே கூடுதல் சேவைகள் மற்றும் பெட்டிகளை வழங்கும் வகையிலான 'தேவைசார்ந்த முன்கணிப்பு அமைப்பை' (Predictive DemandBased System) உருவாக்க வேண்டும்.

கூடுதல் வசதிகள் தேவை என்பது தெளிவாகத் தெரியும் வகையில் அதிக பயன்பாட்டில் உள்ள ரயில் வழித்தடங்களுக்குக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.


நீடித்த விடுமுறை நாட்களில் போதுமான இடவசதி இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இதன் மூலம் பயணிகள் பாதுகாப்பற்ற மற்றும் கடும் நெரிசல் மிகுந்த சூழலுக்குத் தள்ளப்படுவது தவிர்க்கப்படும். பயணிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, அனைத்து ரயில் பெட்டிகளிலும் 'மூடிய கதவு அமைப்பை செயல்படுத்த வேண்டும்.

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

**சிந்தனையைத் தூண்டிய திராவிட எழுத்துகள்:**

# நடமாடும் கல்லூரி – நல்லறிவுக் கல்லூரி ஏ.வி.பி. ஆசைத்தம்பி!



**நடமாடும் கல்லூரி! நல்லறிவுக் கல்லூரி! நாட்டிலே நல்லறிவை, நல்லறிவுணர்ச்சியைப் பரப்பிடும் பணிபுரிந்திடும் கல்லூரி - நடமாடும் கல்லூரி எங்கள் இயக்கம்!**

**நடமாடும் கல்லூரி! பட்டிதொட்டி, நாடுநகரம் குழந்தை முதல் கிழவர் வரை மனித மனம் படைத்த மனிதரின் எண்ணங்களிலெல்லாம் ஊறிப் பதிந்து விட்ட கல்லூரி - நடமாடும் கல்லூரி!**

**அறிவின் ஆரம்ப காலந்தொட்டு இன்றுவரை அழியாத அழிக்க முயன்றும் அழியாத, அழிக்கவே முடியாத அறிவுக் கல்லூரி - நல்லறிவுக் கல்லூரி - நடமாடும் கல்லூரி!**

மனிதர் மனிதராக வாழ - மனிதர் மிருகங்களின் நாள் வேறுபட்டு, கொடுமைகளுக்கிடையே அன்பும் அருளும் அறிவும் ஆராய்ச்சியும் பெற்றுப் புது வாழ்வு - பொதுவாழ்வு வாழ வழிகாட்டுகிறது - எங்கள் நடமாடும் கல்லூரி!

சரித்திரகாலத்திற்கு முன்பிருந்துப் பலர், மனித இனம் மறந்துபோன பலர், இந்த நற்பணியை-நல்லறிவுப் போதனையை - நல்லறிவுக் கல்லூரியை நடத்தி வந்தனர்.

அன்றுதொட்டு இன்று வரை நல்லறிவுக் கல்லூரி நடமாடும் கல்லூரியாக உலகெங்கும் நாடெங்கும் - அறிவின் தூதர்கள் மூலம் நிலவி வருகிறது - நடமாடி வருகிறது.

இத்தகைய அறிவின் தூதர்களின் வழி வந்தவர்கள் உலகின் எப்பகுதியிலும் எல்லாக் காலங்களிலும் தோன்றித் தொண்டு செய்து வந்துள்ளனர்!

**சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸ், சிந்தித்த காரணத்திற்காக, பிறரையும் சிந்திக்கத் தூண்டியதற்காக, நஞ்சு தரப்பட்டார் என்பதும், அப்போதும் அவர் மனமகிழ்ச்சியோடு மாண்டார் என்பதும் சரித்திரங்கண்ட உண்மையாகும்.**

**நஞ்சு குடித்து, குடிக்கும்படி செய்யப்பட்டு மடிந்த சிந்தனையாளன் சாக்ரடீஸ் வகுத்த வழியும், போதித்த நல்லறிவுக் கருத்துக்களும் அவருடன் சேர்ந்து தத்துவஞானி அரிஸ்டாட்டில், அரசியல் அறிஞன் பிளேட்டோ - ரூஸோ - வால்டேர் - கலிலியோ, இயேசு, புத்தர், முகம்மது நபி, உலகப் பெரியார் காந்தி முதலிய பலர் பல காலங்களிலும் நல்லறிவுக் கல்லூரியின் மாணவர்களாக-நாளடைவில் அதன் ஆசிரியர்களாகவும் பேராசிரியர்களாகவும் விளங்க - நாட்டிலே, உலகிலே மேலும் மேலும் நல்லறிவை - நல்லறிவுக் கருத்துக்களைப் பரப்பி-பலரைத் தமது வழி நடத்திப் பண்படுத்திச் சென்றதைக் கண்டோம்.**

**எங்களுக்கு (திராவிட இயக்கத்திற்கு) எதிராக, பழமைப் பிரச்சாரம் பலமாக இப்போது நடைபெற்று வருகிறது, நாடெங்கும்!**

எதிர்ப்பு, ஏளனம், ஏசல், பூசல், தூற்றுதல், பாணங்கள், கேலிமொழிகள், கிண்டல் விளக்குகள், பழமை, மதம் பக்தியும், பற்றும் கொண்டு போதை ஏறிய மக்களின் கோபாவேசம் ஆகிய அத்தனையையும் அன்புமுறையில், அறிவையே ஆயுதமாகக் கொண்டு தாங்கி, எதிர் நீச்சலடித்து, எதிர்ப்பிலே வளரும் இயக்கம், எங்கள் இயக்கம்!

சாதாரண மக்களிடையே நடமாடும் அறிவியக்கம்-எங்கள் இயக்கம்.

நல்லறிவு பரப்பிடும் இந்த இயக்கத்தை - நடமாடும் கல்லூரியை இடித்துவிட, முடித்துவிட, பழமை விரும்பிகள் - சுயநலமிகள் - ஆதிக்கக்காரர்கள் - சுரண்டி வாழ்வோர் பலப்பல விதங்களிலே முயன்று வருகின்றனர்.

எத்தகைய முயற்சிக்கும் முறிந்து போகக்கூடிய கல்லல்ல, இந்த நடமாடும் கல்லூரி!

நல்லறிவும் - நல்லெண்ணமும் கொண்ட மனித மனம் படைத்த பொதுநலத் தொண்டர்கள் மட்டுமல்ல,

பொழுது போக்காக உழைப்பவர்கள்கூட எப்பொழுதும் பணிபுரியும் முறையிலே எங்கள் இயக்கம் அமைந்துள்ளது.

இதனைப் பழிக்க எவராலும், எத்தகைய சக்தியாலும், எப்போதும் முடியவே முடியாது, என்பது மிகமிக உறுதி!

தனிப்பட்ட சிலரது வாழ்விலே குறுக்கிட்டுக் கோலாகலம் விளைவித்து, தனிமனிதரை வேண்டுமென்றால் துன்புறுத்தலாம்.

ஒரு சில உடையார்பாளையம் வேலாயுதங்களைப் பிணமாக்கி, மரக்கிளையிலே தொங்கவிடலாம். மஜீத் - பாண்டியன் போன்று படுகொலை செய்யப்படலாம். வேறு என்ன முடியும்?

அன்றுதொட்டு, இன்று வரை, உலக வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால், அறிவின் தூதர்கள் ஒருவர் ஒருவராக அழிக்கப்பட்டாலும் கொடுமைக்கு - கோர காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டாலும், அவர்கள் - அந்த அறிவின் தூதர்கள்தான் மாண்டனரே தவிர, அவரது எண்ணங்கள், மக்களின் நல்வாழ்வுக்கான கருத்துக்கள் மறையவில்லை - மாறாக, மேலும் மேலும் பலவாக அறிவுரை -

அறிவின் தூதர்கள் நாட்டுக்கு உலகு தந்தன என்பதைக் காணலாம்.

கடவுள், மதம் - ஜாதி பேதம், பழக்கவழக்கம் ஆகிய துறைகளிலே மாற்றல் - அடைந்து மறுமலர்ச்சி பெற்று, 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்று மனவளத்துடனும், மனவலிமையுடனும் தன்னம்பிக்கையைக் கொண்டவராகவும் - தன்மானமிக்கவராகவும் - திராவிடர் வாழ வேண்டும்.

இந்த நல்லெண்ணிலமைக்கு நாட்டு மக்கள் பண்பட்டு பக்குவப்படுத்தித் தருவாயா? நல்லதொன்று செய்து வருவது யார்? - எங்கள் நடமாடும் கல்லூரி!

தமிழன் எண்ணத்துறையிலே பண்பட்டவராகவும், அதே நேரத்தில், தன்னையும், தனது இனத்தையும், தன் நாட்டையும், தனது நாட்டின் இயற்கையையும் அடிமை நிலையையும் உணர்ந்து அதற்கான எல்லாவித தியாகத்தையும் செய்யத் தயாராக வேண்டும்.

**நாம் யார்? நமது நாடு எது? என்பதை உணர வேண்டும். நடமாடும் கல்லூரியின் முக்கியப் பணிகளிலே நமது நாட்டை நாமே ஆளவேண்டும் - அதற்கான பணிபுரிந்தாக வேண்டும் என்பது மிகமிக முக்கியமாகும்.**

**அதற்கான பயிற்சி, போர்ப்பணி - புத்தறிவுப் பாதையை நடமாடும் கல்லூரியின் பேராசிரியர் அறிஞர் அண்ணா காட்டுகிறார் - அதன்வழி - அண்ணா காட்டும் அறப்போர் வழி நடப்போம் - வாரீர்!**